ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2512 - 2026 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2026.10.23

2512ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
கேள்விப்பத்திர அறிவித்தல்கள்	-	உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்	3700
கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்	3696	அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்	-
பொருட்கள் விற்பனவும் பிறவும்	3696	ஏல விற்பனைகள்	3702
ஆய விற்பனையும் குத்தகையும்	-	நானாவித அறிவித்தல்கள்	-

கவனிக்க .- (i) த குட்நஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2026.10.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2026.10.16 ஆந் திகதியஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026,நவெம்பர் மாதம் 13ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பிரசன்ன ஜயரத்ன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3695- B 82841- (2026/10)

கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

ஒப்பந்தம் வழங்கல் பற்றிய அறிவித்தல்
டிஜிட்டல் பொருளாதார அமைச்சு

அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல்களின் இயைபுடைய ஏற்பாடுகளுக்கும், ஒப்பந்தம் வழங்கல்களை வெளியிடுவது தொடர்பான கொள்முதல் கையேட்டின் பிரிவு 8.8 இற்கும் இணங்க கீழே விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தம் டிஜிட்டல் பொருளாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

(அ) விலைமனுக்கள் / முன்மொழிவுகள் கோரப்பட்ட பொருட்கள்/ பணிகள்/ சேவைகளின் விபரம் :

தேசிய அடையாள அட்டடை வழங்குவதற்கான ஐந்து மில்லியன் முன் அச்சிடப்பட்ட பொலிகாபனேட் அட்டைகளைக் கொள்வனவு செய்தல்.

(ஆ) கொள்முதல் குறிப்பிலக்கம் : DRP/ACC/ 07/ 33/ 2025

(இ) கொள்முதல் முறை :சர்வதேச போட்டி விலைமனு கோரல்

(ஈ) பெறப்பட்ட மொத்த விலைமனுக்கள்/ முன்மொழிவுகளின் எண்ணிக்கை :08

(உ) தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்/ ஒப்பந்தக்காரரின் பெயர்: Muhlbauer ID Services GmbH

(ஊ) தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்/ ஒப்பந்தக்காரரின் முகவரி : Josef - Muhlbauer - platz 1, 93426 Roading , Germany

(எ) ஒப்பந்த விலை :யூரோ 4,925,000

(ஏ) ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதி:2026.09.25

உயர்மட்ட கொள்முதல் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க Muhlbauer ID Services GmbH நிறுவனத்திற்கு யூரோ நான்கு மில்லியன் ஒன்பது இலட்சத்து இருபத்தையாயிரம் தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தல் பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

வருண ஸ்ரீ தனபால,
செயலாளர்.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு,
2026.

10- 711

பொருட்கள் விற்பனவும் பிறவும்

நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை -2026

வவுனியா நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் அரசுடைமையாக்கப்பட்ட சான்றுப்பொருட்களின் 2026.10.27. ஆந் திகதி வவுனியா நீதிமன்ற வளாகத்தில் வைத்து பி.ப.3.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

01.யாராவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சான்றுப்பொருட்களினை ஏதாவது உரிமை கோருமிடத்து விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

02. பொது மக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு சான்றுப் பொருட்களைப் பார்வையிடலாம்.

03. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது சான்றுப்பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அச் சான்றுப்பொருட்களின் மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே கொண்டிருக்கும்.

04. விற்கப்பட்ட சான்றுப்பொருட்களின் பணத்தினை உடன் செலுத்தி சான்றுப்பொருட்களின் பணத்தினை உடன் செலுத்தி சான்றுப்பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே

செலுத்த வேண்டும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது..

05. சான்றுப்பொருட்களை கொள்வனவு செய்வோர் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும்.

H.M. மொஹொமட் பசீல்,
மாவட்ட நீதிபதி.

மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம்,
வவுனியா.

தொ.இல.	*வழக்கு இல.*	*சான்றுப் பொருள் இல.*	*சான்றுப்பொருள்*	*மதிப்பீட்டுப் பெறுமதி*
01	VAV/MC/MS/04311/26	PR/336/26	மணல் 3 கியூப்	50,000.00
02	VAV/MC/MS/03502/26	PR/203/26	மணல் 3 கியூப்	50,000.00
03	VAV/MC/MS/04621/26	PR/226/26	மணல் 3 கியூப்	50,000.00
04	VAV/MC/MS/04622/26	PR/228/26	மணல் 3 கியூப்	50,000.00
05	VAV/MC/MS/04786/26	PR/470/26	மணல் 3 கியூப்	50,000.00
06	VAV/MC/MS/05264/26	PR/372/26	மணல் 3 கியூப்	50,000.00
07	VAV/MC/MS/05407/26	PR/286/26	மணல் 3 கியூப்	50,000.00
08	VAV/MC/MS/06295/26	PR/470/26	மணல் 3 கியூப்	50,000.00
09	VAV/MC/MS/08266/26	PR/355/26	கிரவல் 3 கியூப்	15,000.00
10	VAV/MC/MS/08267/26	PR/356/26	கிரவல் 3 கியூப்	15,000.00
11	VAV/MC/MS/08268/26	PR/354/26	கிரவல் 3 கியூப்	15,000.00
12	VAV/MC/MS/08272/26	PR/357/26	கிரவல் 3 கியூப்	15,000.00

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - ஏறாவூர்
பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2026.11.07 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்ற பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

மதுஞ்சலா கேதீஸ்வரன்,
மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிபதி மற்றும்
மேலதிக மாவட்ட நீதிபதி.

மட்டக்களப்பு,
2026, ஒற்றோபர் 02.

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்- ஏறாவூர்
பகிரங்க ஏல விற்பனை பொருட்கள்

தொ.இல.	*வழக்கு இலக்கம்*	*மோட்டார் வாகன இலக்கம்*	*வாகன வகை*
01	27960/F/18	UG - 1887	மோட்டார் சைக்கிள்
02	9455/MT/25	BFG - 2757	மோட்டார் சைக்கிள்
03	6349/MISC/25	BDC - 0039	மோட்டார் சைக்கிள்
04	AR/550/26	-	தோணி

10- 644

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - மொரவெவ

வழக்குச் சான்றுப்பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2026.10.26

மொரவெவ சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமைகோரப்படாததுமான கீழ் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2026.10.26 ஆந் திகதியன்று மாலை 2.30 மணிக்கு சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் மொரவெவ வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

01.இவ்வழக்குச் சான்றுப்பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருந்தால் ஏலவிற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்டும்.

02. பொதுமக்கள் இந்நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப்பொருட்களின் ஏல விற்பனை தொடங்குவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

03 இவ்வழக்குச் சான்றுப்பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாதபட்சத்தில் ஏல விற்பனையிலிருந்து குறித்த பொருட்களை மீளப்பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

04. இவ்வழக்குச் சான்றுப்பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாகப் பணத்தினைச் செலுத்தி அதனை நீதிமன்றத்தினால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வளாகத்திலிருந்து உடனடியாக அப்புறப்படுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. வழக்குச் சான்றுப்பொருட்களை விலை கோரி வாங்குபவர்கள் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய ஆளடையாள அட்டையினை கொண்டு வருதல் வேண்டும்.

A.W. அர்ஜூன்,
மேலதிக நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை,
2026.10.09.

வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2026.10.26.

தொ.இல.	*வழக்கு இலக்கம்*	*ஏலமிடும் பொருள்*	*அளவு அல்லது விபரம்*
01	MCM/460/MIS/26	மணல்	கியூப் - 09
02	MCM/853/26	கிரவல்	கியூப் - 06
03	MCM/MIS/99/26- B	சிப்பி	1. ஒரு உறை 48 Kg வீதம் 120 உறைகள் 2. ஒரு உறை 49 Kg வீதம் 100 உறைகள் 3. ஒரு உறை 50 Kg வீதம் 68 உறைகள் 4. ஒரு உறை 52 Kg வீதம் 14 உறைகள் 5. ஒரு உறை 51 Kg வீதம் 48 உறைகள் மொத்தம் - 350 உறைகள்
04	MC/1400/22	Bajaj CT 100 99.27CC Black and Red	BIU - 5102 மோட்டார் சைக்கிள்
05	MC/1400/22	Hero HF Delux 97.2 CC Red	BCJ - 4529 மோட்டார் சைக்கிள்
06	MCM/432/MT/24	TVS Starsport 100 CC Red	MU-0943 மோட்டார் சைக்கிள்
07	இலக்கமற்ற	Honda Hand Tractor	Scrap
08	இலக்கமற்ற	Agrotech Hand Tractor	Scrap
09	MCM/316/MIS/24	Trailor	RY-1469 (Scrap)
10	MCM/5381/MIS/21	Motor Car Toyota Cerise Light Green	64-4735 மோட்டார் சைக்கிள் (Scrap)
11	MCM/1099/MIS/25	Generator Navigator	EPH 3700E
12	MCM/1007/MIS/24	Generator Navigator	EPH 4500 E2

தொ.இல.	*வழக்கு இலக்கம்*	*ஏலமிடும் பொருள்*	*அளவு அல்லது விபரம்*
13	ARM/327/25	Solar Penal White	02
14	ARM/327/25	Water Horse Black	01
15	MCM/384/FS/25	Fiberglass Outer rigger 10.5 CN - OTG-1095 Blue	01
16	MCM/384/FS/25	Fiberglass Cane 18.5 CN - IF - 2095 Blue	01
17	இலக்கமற்ற	பலகை அறுக்கும் இயந்திரம்	01
18	இலக்கமற்ற	பிளாஸ்ரிக் கதிரைகள்	10
19	இலக்கமற்ற	இரும்பு பரல்கள் (சிறியது)	04
20	இலக்கமற்ற	இரும்பு பரல்கள் (பெரியது)	15
21	இலக்கமற்ற	பிளாஸ்ரிக் கேன்கள் (சிறியது)	15
22	இலக்கமற்ற	பிளாஸ்ரிக் கேன்கள் (பெரியது)	16
23	இலக்கமற்ற	கிளாஸ் போத்தல்கள்	50

10- 671

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

கம்பனியின் பெயர் மாற்றத்திற்கான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க,கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகளை ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 242 (1) ஆம் பிரிவின்படி எல்.ஓ.எல்.சி. சிலோன் புரொப்பர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் - PV 00229980 மற்றும் எல்.ஓ.எல்.சி. இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஹோல்டிங்ஸ் எய்ட் (பிரைவட்) லிமிடெட் - PV 00266281 ஆகியவற்றின் பணிப்பாளர் சபையினால் , எல்.ஓ.எல்.சி சிலோன் புரொப்பர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் உடன் எல்.ஓ.எல்.சி. இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஹோல்டிங்ஸ் எய்ட் (பிரைவட்) லிமிடெட் ஆகியவற்றை ஒன்றிணைப்பது தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. எல்.ஓ.எல்.சி. இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஹோல்டிங்ஸ் எய்ட் (பிரைவட்) லிமிடெட்என்பது எல்.ஓ.எல்.சி சிலோன் புரொப்பர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட்டின் முழுமையான உரிமையைக் கொண்ட துணைக்கம்பனியாகும். மேற்கூறிய ஒன்றிணைப்புக்கு இணங்க, எல்.ஓ.எல்.சி. இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஹோல்டிங்ஸ் எய்ட் (பிரைவட்) லிமிடெட் ஆனது பங்குகள் எதனையும் செலுத்துவது இன்றி செல்லுபடியற்றதாக்கப்படுவதுடன், வேறு ஏதேனும் பிணைப்புடன் எல்.ஓ.எல்.சி சிலோன் புரொப்பர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தினால் எல்.ஓ.எல்.சி. இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஹோல்டிங்ஸ் எய்ட் (பிரைவட்) லிமிடெட்டின் அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. தொடர்ந்து இயங்கும் கம்பனியாக எல்.ஓ.எல்.சி சிலோன் புரொப்பர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனம் அமையும். ஒன்றிணைக்கப்பட்டதைத் தொடர்ந்து எல்.ஓ.எல்.சி சிலோன் புரொப்பர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட்டின் தற்போதைய பணிப்பாளர்கள் ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்களாகச் செயற்படுவர்.

இக்கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளின் அபிப்பிராயம் என்னவென்றால், உத்தேச ஒன்றிணைப்புச் செயற்பாடானது கம்பனிகள் இரண்டினதும் நலனுக்காக காணப்படுவதாகும். ஒன்றிணைப்புச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டதும் எல்.ஓ.எல்.சி சிலோன் புரொப்பர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனம் வலுப்பெறுவதுடன் மூலதன நிலைத்தன்மையும் உறுதிப்படுத்தப்படும்.

2026, நவெம்பர் 30 ஆந் திகதி முதல் அல்லது கம்பனிகள் பதிவாளரினால் தீர்மானிக்கப்படும் வேறு ஒரு திகதியில் இருந்து ஒன்றிணைப்பு நடைமுறைக்கு வரும்.

பணிப்பாளர் சபையின் உத்தரவின்படி,

எல்.ஓ.எல்.சி.கோப்பரேட் சேர்வீசஸ் (பிரைவட்) லிமிடெட்,
எல்.ஓ.எல்.சி. சிலோன் புரொப்பர்டி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் மற்றும்
எல்.ஓ.எல்.சி. இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஹோல்டிங்ஸ் எய்ட் (பிரைவட்) லிமிடெட்,
ஆகியவற்றின் செயலாளர்கள்.

2026, ஒற்றோபர் 12.

10- 677

பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59(2) இன் கீழ் நிறுவனத்தின் அறிவிக்கப்பட்ட மூலதனத்தை குறைப்பது தொடர்பான பொது அறிவிப்பு

நிறுவனத்தின் பெயர் : போலெட்னா (பி.வி.டி.) எல்டீடி
நிறுவன பதிவு இலக்கம் : PV 00293435
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.103/1, போதி மாவத்தை, உனகுருவ, தங்காலை
குறைப்பதற்கு முன் அறிவிக்கப்பட்ட மூலதனம் : ரூ. 722,622,720.00
குறைப்பிற்கு பிந்தைய அறிவிக்கப்பட்ட மூலதனம் : ரூ. 1,000.00
குறைக்கப்படும் தொகை : ரூ. 722,621,720.00

நிறுவனச் செயலாளர்கள்,
பி.பி.சி.மேனேஜ்மென்ட் கன்சல்டன்ட்ஸ் (பி.வி.டி.) எல்டீடி.

10- 702

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, PV 2866 எனும் கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட ஃபவுன்டேஷன் பெனெட் (பிரைவட்) லிமிடெட் மற்றும் PV 3038 எனும் கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட நியு கலெஷன் (எல்கே) (பிரைவட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்களின் கூட்டிணைப்பு நிறைவடைந்துள்ளதை இதன்மூலம் அறிவிக்கின்றோம்.

கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : கியு கலெஷன் (எல்கே) (பிரைவட்) லிமிட்டட்
திகதி: 2026, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி

கம்பனிச் செயலாளர்கள்,
கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்.

10- 698

ஏல விற்பனைகள்

சம்பத் வங்கி பீஎல்சீ
(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஹொரைசன் டுவர் இன் (பிரைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல. 0076 1000 5327

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2025.11.12ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2026.02.27ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2026.02.20 ஆந் திகதிய திவயின (Divaina) , ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் எட்டு கோடியே எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து ஐந்நூற்று அறுபத்து ஆறு ரூபா அறுபத்து எட்டு சதம் (ரூபா 80,896,566.68) 2025, ஒற்றோபர் 10 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஆறு கோடியே இருபத்து ஏழு இலட்சத்து எழுபத்து ஆராயிரத்து எண்ணூற்று எண்பத்து ஏழு ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூபா 62,771,887.97) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு தசம் சைபர் வீதம் (14.0%) மேலும் எழுபத்து எட்டு இலட்சத்து பதின் ஏழாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா எண்பத்து ஐந்து சதம் (ரூபா 7,817,797.85) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு தசம் சைபர் வீதம் (14.0%) மேலும் அறுபத்து ஆறு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து முன்னூற்று இருபத்து ஒன்பது ரூபா நாற்பத்து இரண்டு சதம் (ரூபா 6,633,329.42) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு தசம் சைபர் வீதம் (14.0%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 3602, 6747, 6814 மற்றும் 2325 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான என். யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2005.05.14 ஆந் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.D. எட்வர்ட் அவர்களால் வரையப்பட்ட வரைபட இல. 2047 B இல் லொட் இல. 1 ஐ 2026.11.17ஆந் திகதி மு.ப.10.00 மணி முதல், அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே ராகம் பத்துவின் ஜா - எல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் இதிமின்ன இல. 211A கிராம அலுவலர் பிரிவின் பட்டகம வடக்கு கிராமத்தில் அமைந்த வெலிகம்பிட்டிய வீதி வரிமதிப்பீட்டு இல. 426/6 ஐ ஏற்ற "கொடபரகாஹாவத்தெ கெபெள்ள" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.D. எட்வார்ட் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, மே 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 2047B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் G.L.B. நானயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, சனவரி 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 11172 எனும் வரைபடத்தில் லொட் 6, உத்தரவுபெற்ற நில அளவையாளர் M.D. எட்வார்ட் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, பெப்புருவரி 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 831A எனும் வரைபடத்தில் லொட் 2; கிழக்கு: G.D.பீற்றர் என்பவரின் காணி; தெற்கு: ஹரிஸ்சந்ர என்பவரின் காணி மற்றும் மேற்கு: G.D. பீற்றர் அப்புஹாமி மற்றும் ஏனையோரின் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பத்தொன்பது தசம் ஆறு ஆறு பேர்ச் (00ஏ. 01றூ. 19.66பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2047B எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் J 635/98 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 11172 எனும் வரைபடத்தின் லொட் 9 மற்றும் 10 ஊடாகவும் மற்றும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 701

இலங்கை வங்கி
ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

இல.150, மொரட்டுவ வீதி, சுவரபொல, பிலியந்தல எனும் முகவரியைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட RDMD ரெக்ஸ்ரைல் (தனியார்) நிறுவனம் மற்றும் இல. 80, நீர்கொழும்பு வீதி, ஜா-எல எனும் முகவரியைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட "றுத் ஸ்டைல் "(தனியார்) நிறுவம் ஆகியவற்றின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த

தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.09.04 ஆந் திகதியிட்ட 2505 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2026.09.08ஆந் திகதிய தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும், நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T.கருணாரத்ன அவர்கள் 2026.12.08ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலே கூறப்பட்ட அட்டவணை

ஆதனம் 1- "மாகுல்லகஹவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.ஜி. குணதிலக்க தயாரித்த 2015.10.16ஆம் திகதிய வரைபட இல. 9668 இல் துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட தும் இல. 80, நீர்கொழும்பு வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் கனுவான ஜா- எல என்ற முகவரியில் அமைந்துள்ளதுமான காணி 2026.12.08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து ஏல விற்பனை செய்யப்படும்.

பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாஆரச்சு அத்தாட்சிப்படுத்திய 2017.02.23 ஆந் திகதிய ஈட்டு முறி இல. 431, பிரசித்த நொத்தாரிசு G.L. யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2018.12.11 ஆந் திகதிய ஈட்டு முறி இல. 1948, பிரசித்த நொத்தாரிசு M.D.I.K. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2023.08.16 ஆந் திகதிய ஈட்டு முறி இல. 2094 மற்றும் பிரசித்த நொத்தாரிசு C.L. யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2020.11.12 ஆந் திகதிய ஈட்டு முறி இல. 2154 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை

"மாகுல்லகஹவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.ஜி. குணதிலக்க தயாரித்த 2015.10.16ஆம் திகதிய வரைபட இல. 9668 இல் துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோரளையின் ராகம் பற்றுவில் ஜா-எல நகர சபை எல்லைக்குட்பட்ட ஜா-எல பிரதேச செயலகப் பிரிவின்கீழ் 191 கனுவான கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கனுவான எனும் இடத்தில் இல. 80, நீர்கொழும்பு வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் அமைந்துள்ளது. வடக்கே ஏ. பெரேராவின் காணி; கிழக்கே வரைபட இல. 2857 இல் உள்ள துண்டு 5C மற்றும் கே.கே. சார்வாயின் காணி; தெற்கே உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். டி. எட்வேட் தயாரித்த வரைபட இல. 6946 இல் உள்ள துண்டு 1; மேற்கே இந்தக் காணிக்கும் நீர்கொழும்பு வீதிக்கும் இடைப்பட்ட வீதியோர ஒதுக்கம் என்பவற்றை எல்லைகளாக கொண்டுள்ள இக்காணி பதினேழு தசம் எட்டு ஒன்று பேர்ச்சுகள் (00ஏ.00றூ.17.81பே.) பரப்பளவையும் ஐந்து மாடிக் கட்டடம், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் என அதில் அமைந்துள்ள அனைத்தையும் கொண்டுள்ளது.

மேற்படி துண்டு 1 என்பது கீழே விவரிக்கப்பட்டுள்ள காணியின் மறுநில அளவையாகும்:

"மாகுல்லகஹவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.டி.என். பெரேரா தயாரித்த 2004.07.14 ஆம் திகதிய வரைபட இல. 2860A இல் துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு X மேலே கூறப்பட்டவாறு கனுவான கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கே ஏ. பெரேராவின் காணி: கிழக்கே வரைபட இல. 2857 இல் உள்ள துண்டு 5C மற்றும் கே.கே. சார்வாயின் காணி; தெற்கே உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.டி. எட்வேட் அவர்களினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 461 இல் உள்ள துண்டு 2; மேற்கே வீதி (Highway) என்பவற்றை எல்லைகளாக கொண்டுள்ள இக்காணி பதினேழு தசம் எட்டு ஒன்று பேர்ச்சுகள் (00ஏ.00றூ.17.81பே.) பரப்பளவையும் ஐந்து மாடிக் கட்டடம், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் என அதில் அமைந்துள்ள அனைத்தையும் கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப் பதிவகத்தில் J42/120 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதனம் 2- "பதுல்லகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.டி. எட்வேட் தயாரித்த 2015.09.09ஆந் திகதிய வரைபட இல. 6946 இல் துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்டதும் 74/1/1 , நீர்கொழும்பு வீதி என்ற வரிமதிப்பூட்டு இலக்கத்துடன் கனுவான , ஜா-எல என்ற முகவரியில் அமைந்துள்ளதுமான காணி 2026.12.18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து ஏல விற்பனை செய்யப்படும்.

பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாஆரச்சி அத்தாட்சிப்படுத்திய 2017.02.23ஆம் திகதிய ஈட்டு முறி 432, பிரசித்த நொத்தாரிசு எம்.டி.ஐ.கே. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2023.08.16ஆம் திகதிய ஈட்டு முறி 2095 மற்றும் பிரசித்த நொத்தாரிசு சி.எல். யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2018.12.11ஆம் திகதிய ஈட்டு முறி

1949 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை.

"பதுல்லகஹவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.டி. எட்வேட் தயாரித்த 2015.09.09ஆம் திகதிய வரைபட இல. 6946 இல் துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோரளையின் ராகம் பற்றுவில் ஜா-எல நகர சபை எல்லைக்குட்பட்ட ஜா-எல பிரதேச செயலகப் பிரிவின் கீழ் இல.191 கனுவான கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கனுவான எனும் இடத்தில், 74/1/1 நீர்கொழும்பு வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் அமைந்துள்ளது. வடக்கே இல. 80 கொழும்பு வீதி, என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்; கிழக்கு மற்றும் தெற்கே P.F. நோனிஸின் ஆதனம்; மேற்கே கொழும்பு-நீர்கொழும்பு பிரதான வீதி (High Road) என்பவற்றை எல்லைகளாக கொண்டுள்ள இக்காணி பதின்மூன்று பேர்ச்சுகள் (00ஏ.00றூ.13பே.) பரப்பளவையும் ஐந்து மாடிக் கட்டடம், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் என அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

மேற்படி துண்டு 1 என்பது கீழே விவரிக்கப்பட்டுள்ள காணியின் மறு நில அளவையாகும்:

"பதுல்லகஹவத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.டி. எட்வேட் தயாரித்த 1993, ஏப்பிறல் 04 ஆம் திகதிய வரைபட இல. 461 இல் துண்டு 2 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு மேலே கூறப்பட்டவாறு கனுவான எனும் இடத்தில் அமைந்துள்ளது. வடக்கே துண்டு 1 மற்றும் காத்தமுத்து சார்வாயின் காணி; கிழக்கு மற்றும் தெற்கே P. F. நோனிஸின் ஆதனம்; மேற்கே கொழும்பு-நீர்கொழும்பு பிரதான வீதி என்பவற்றை எல்லைகளாக கொண்டுள்ள இக்காணி பதின்மூன்று பேர்ச்சுகள் (00ஏ.00றூ.13பே.) பரப்பளவைக் கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப் பதிவகத்தில் J 215/116 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதனத்தைச் சென்றடையும் வழி: நீர்கொழும்பு வீதி, ஜா-எல கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலில் இருந்து நீர்கொழும்பு நோக்கி நீர்கொழும்பு வீதி வழியாக சுமார் 50 மீற்றர்கள் பயணித்தால், அவ்வீதிக்கு முகப்பாக வீதியில் வலதுபக்கத்தில் அமைந்துள்ள "RUTH STYLED" என்ற வணிக ஆதனத்தை அடையலாம்.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்:

1. கொள்வனவு விலையில் 10% (பத்து வீதம்) ;
2. பெறுமதிசேர் வரி (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5 % (இரண்டு தசம் ஐந்து வீதம்) ;
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும் .மேலும் விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வானவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து, ஏல விற்பனை தொடர்பில் அவரால் செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

"ஏல விலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் பெருநிறுவன அறவிடற் பிரிவில் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 011- 2386079.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,
A.C.H. அத்துக்கோரல,
சிரேஷ்ட முகாமையாளர்,
பெருநிறுவன அறவிடற் பிரிவு.

இலங்கை வங்கி,
பெருநிறுவன அறவிடற் பிரிவு,3 ஆம் மாடி,
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

10- 736

இலங்கை வங்கி
ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

இல.150, மொரட்டுவ வீதி, சுவரபொல, பிலியந்தல எனும் முகவரியைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட RDMD ரெக்ஸ்ரைல் (தனியார்) நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.09.04 ஆந் திகதியிட்ட 2505 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2026.09.08ஆந் திகதிய தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை யையும் விற்பனைத் திகதி வரை செலுத்தப்படவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும், நிலமனை யையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு.M.H.T.கருணாரத்ன அவர்கள் 2026.12.08ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பிரசித்த நொத்தாரிசு D.I. கமகே அத்தாட்சிப்படுத்திய 2018.03.29ஆம் திகதிய ஈட்டு முறி இல.26; பிரசித்த நொத்தாரிசு M.D.I.K.கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2023.08.16ஆம் திகதிய ஈட்டு முறி இல.2093 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை.

"வசுந்தரவத்த மற்றும் "கோவில்வத்த"என அழைக்கப்படும் காணியிலிருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் A S C விதானகே தயாரித்த 2023.08.12 மற்றும் 13 ஆம் திகதிய வரைபட இல. 1392 இல் துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி 178/1, குணவர்தன வீதி என்ற தற்போதைய வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை நாற்கடவை (Four Gravets) மற்றும் மாத்தறை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின், 416B கொட்டுவேகொட தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொட்டுவேகொட எனும் இடத்தில் அமைந்துள்ளது. வடக்கே உரிமம் பெற்ற நில அளவையாளர் M L M ரஸ்மி தயாரித்த வரைபட இல. 1254 இன் துண்டு 1, வரைபட இல. 864 இன் துண்டுகள் A1 மற்றும் A2 மற்றும் தங்காலை வீதி; கிழக்கே 186, 186/2, 186/3, தங்காலை வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் மற்றும் கடற்றொழில் கூட்டுறவுச் சங்க ஆதனம்; தெற்கே கடற்றொழில் கூட்டுறவுச் சங்க ஆதனம் மற்றும் வீதி; மேற்கே 91, 93, 95 பழைய சந்தை வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் M L M ரஸ்மி தயாரித்த வரைபட இல. 1254 இன் துண்டு 1 ஆகியவற்றை எல்லைகளாக கொண்டுள்ள இக்காணி ஒரு ரூட் மற்றும் இரண்டு தசம் ஏழு ஒன்று பேர்ச்சுகள் (00ஏ.01றூ.2.71பே.) அல்லது 0.1079 ஹெக்ரயர் பரப்பளவையும் கட்டடங்கள், மரங்கள். பயிர்த்தோட்டங்கள் என அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணித் துண்டானது கீழே விவரிக்கப் பட்டுள்ள காணியின் மீள் நில அளவையாகும்:

"வசுந்தரவத்த மற்றும் "கோவில்வத்த"என அழைக்கப்படும் காணியிலிருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் A S C விதானகே தயாரித்த 2003.10.26 ஆம் திகதிய வரைபட இல. 732 இல் துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி 178/1, குணவர்தன வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நாற்கடவை (Four Gravets) மற்றும் மாத்தறை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின் 416B கொட்டுவேகொட தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொட்டுவேகொட எனும் இடத்தில் அமைந்துள்ளது. வடக்கே உரிமம் பெற்ற நில அளவையாளர் M L M ரஸ்மி தயாரித்த வரைபட இல. 864 இன் துண்டுகள் A1 மற்றும் A2 மற்றும் தங்காலை வீதி (குணவர்தன மாவத்தை); கிழக்கே 186, 186/1, 186/3, தங்காலை வீதி (குணவர்தன மாவத்தை) என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் தெற்கே கடற்றொழில் கூட்டுறவுச் சங்க ஆதனம் மற்றும் வீதி; மேற்கே 91, 93, 95 பழைய சந்தை வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் M L M ரஸ்மி தயாரித்த வரைபட இல. 1254 இன் துண்டு 1 ஆகியவற்றை எல்லைகளாக கொண்டுள்ள இக்காணி ஒரு ரூட் மற்றும் இரண்டு தசம் ஏழு ஒன்று பேர்ச்சுகள் (00ஏ.01றூ.2.71பே.) பரப்பளவையும் கட்டடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் என அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு மாத்தறைக் காணிப் பதிவகத்தில் A 800/129 எனும் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணித் துண்டானது, குறித்த வரைபட இல. 732இல் மேற்கொள்ளப்பட்ட 2011.03.12ஆம் திகதிய குறிப்பீட்டின்படி, உரிமம் பெற்ற நில அளவையாளர் M.L.M.ரஸ்மி தயாரித்த 2001.05.06 ஆம் திகதிய வரைபட இல. 1267 இல் காட்டப்பட்டுள்ள அதே காணியாகும். அது பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:

"கோவில்வத்த மற்றும் வசுந்தரவத்த" என அழைக்கப்படும் காணியின் குறித்த வரைபட இல. 1267இல் துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டு, 178/1 புதிய தங்காலை வீதி (குணவர்தன மாவத்தை), என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேலே குறிப்பிடப்பட்டவாறு கொட்டுவேகொட எனும் இடத்தில் அமைந்துள்ளது. வடக்கே புதிய தங்காலை வீதி (குணவர்தன மாவத்தை) மற்றும் 178 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட அதே காணியின் துண்டு A^2 கிழக்கே 186 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட அதே காணியின் துண்டு B: தெற்கே வசுந்தரவத்தையின் துண்டு 4 மற்றும் விஜேநாயக்கவத்தை; மேற்கே 176 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட அதே காணியின் துண்டு A^1, வரைபட இல, 1254 இல் உள்ள கோவில்வத்தையின் 174 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட துண்டு 2 மற்றும் கோவில்வத்தையின் துண்டு A ஆகியவற்றை எல்லைகளாக கொண்டுள்ளதோடு ஒரு

ரூட் மற்றும் இரண்டு தசம் எட்டு ஆறு நான்கு பேர்ச்சுகள் (00ஏ. 01றூ. 2.864பே) பரப்பளவையும் கட்டடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் என அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

ஆதனத்தைச் சென்றடையும் வழி: மாத்தறை பேரூந்து நிலையத்திலிருந்து தங்காலை வீதி வழியாக சுமார் 100 மீற்றர்கள் பயணித்தால் அவ்வீதியின் வலதுபக்கத்தில் அமைந்துள்ள குறித்த ஆதனத்தை அடையலாம். இவ்வாதனமானது சம்பத் வங்கி வளாகத்திற்கு நேர் எதிரே அமைந்துள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்:

1. கொள்வனவு விலையில் 10% (பத்து வீதம்) ;
2. பெறுமதிசேர் வரி (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5 % (இரண்டு தசம் ஐந்து வீதம்) ;
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும் .மேலும் விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வானவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து, ஏல விற்பனை தொடர்பில் அவரால் செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடி யற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

"ஏல விலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் பெருநிறுவன அறவிடற் பிரிவில் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 011- 2386079.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

A.C.H. அத்துக்கோரல,
சிரேஷ்ட முகாமையாளர்,
பெருநிறுவன அறவிடற் பிரிவு.

இலங்கை வங்கி,
பெருநிறுவன அறவிடற் பிரிவு,3 ஆம் மாடி,
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

10- 735

இலங்கை வங்கி
ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல. - 74896710,77030801, 78135756, 80616465.

இலக்கம் 35. 2 ஆம் ஒழுங்கை. கன்கொருவ வீதி, முருதலாவ மற்றும் 1/11 கன்னொருவ, முருதலாவ என்ற முகவரியைச் சேர்ந்த Lakpahan Industries நிறுவகத்தின் ஏக உரிமையாளரான அமரர் திரு. களுபஹனகே பிரசாத் மற்றும் ஆதனத்தின் சட்ட நிர்வாகியாக வழக்கு இல. DSP 28/19 மூலம் நியமிக்கப்பட்ட அவரது மனைவி, திருமதி எதிரிசூரிய அபேவீர ஆரச்சி பட்டபெந்திகே அனுஷா அபேவீர ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.08.14 ஆந் திகதியிட்ட 2502 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2026.08.17ஆந் திகதி திங்கட்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும், நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த டீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எச்.துசித் கருணாரத்ன அவர்கள் 2026.11.27ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை குறிப்பிடுவது

உரிமம் பெற்ற நில அளவையாளர் ரி.பியசேன தயாரித்த 1985.02.10 ஆந் திகதியிட்ட 122/83 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட எல்லபிட்டியேவத்த என அழைக்கப்படும் காணிக்குட்பட்ட காணி மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர கங்க பலாத்த கோரளையின், யட்டிநுவர பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுள், இலக்கம் 137 பெலவ பஹலகம கிராம அலுவலர் பிரிவில், பெலவ எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணி வடக்கில் பூர்ணபத்ர உரிமை கோரும் கால்வாய் மற்றும் எல்லபிட்டியேவத்த என்பவற்றையும் கிழக்கில் எல மற்றும் எல்லபிடியே கும்புர என்பவற்றையும் தெற்கில் எம்.பீ.ஜோன் என்பவரின் அகல இம மற்றும் ஹிட்டினாவத்த ஆனால் சரியாக எச்.டீ.ஜோன் என்பவரின் அகல மற்றும் ஹிட்டினாவத்த என்பவற்றையும்

மேற்கில் பிரதான வீதிக்கு செல்லும் நடைபாதையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணி அங்குள்ள மண், மரங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி மூன்று றூட் முப்பத்தைந்து தசம் ஐந்து பேர்ச் (0ஏ.3றூ.35.5பே.) பரப்பளவுடன் B466/249 எனும் இலக்கத்தின் கீழ் கண்டி காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காணி பின்னர் மேற்கொள்ளப்பட்ட நில அளவையின்படி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.ஆர்.ரி.குருசிங்ஹ தயாரித்த 2000.03.22 ஆந் திகதியிட்ட 1994 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட எல்லபிட்டியேவத்த என அழைக்கப்படும் காணிக்குட்பட்ட காணித்துண்டு1 மேற்குறிப்பிட்டவாறு பெலவ எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணி வடக்கில் பூர்ணபத்ர உரிமை கோரும் கால்வாய் மற்றும் எல்லபிட்டியேவத்த என்பவற்றையும் கிழக்கில் எல மற்றும் எல்லபிட்டியே கும்புர என்பவற்றையும் தெற்கில் எம். பீ.ஜோன் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் எல, இம மற்றும் ஹிட்டினாவத்த என்பவற்றையும் மேற்கில் கிராமத்திலிருந்து பிரதான வீதிக்குசெல்லும் பெலவ மயான வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணி அங்குள்ள மண், மரங்கள் மற்றும் அனைத்துடனும் மூன்று றூட்ஸ் முப்பத்தைந்து தசம் ஐந்து பேச்சுகள் (ஏ0.ரூ3.பே35.5) அல்லது 0.3931 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றி பெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்:

1. கொள்வனவு விலையில் 10% (பத்து வீதம்) ;
2. பெறுமதிசேர் வரி (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5 % (இரண்டு தசம் ஐந்து வீதம்) ;
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும் .மேலும் விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வானவாளர் செலுத்த வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து, ஏல விற்பனை தொடர்பில் அவரால் செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் கையகப்படுத்தும் உரிமை வங்கிக்கு உண்டு.

ஆதனத்துக்கான வழி: பிலிமதலாவ நகரிலிருந்து பேராதெனிய நகரம் வரை சென்று, அங்கிருந்து இடதுபுறமாக "கன்னொருவ- பேராதெனிய வீதியில் திரும்பவும். பின்னர் சுமார் 1 கிலோமீற்றர் தூரம் பயணித்தனு "முருதலாவ " வீதிச் சந்தியை (ரணபீம ரோயல் கல்லூரி வீதி) அடைந்து இங்கிருந்து இடதுபுறமாக "முருதலாவ " வீதியில் திரும்பவும். அங்கிருந்து சுமார் 3.5 கிலோமீற்றர் தூரம் சென்று 2 ஆவது ஒழுங்கையில் , வலதுபுறமாக திரும்பி சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் ஆதனம் வலதுபுறத்தில் அமைந்திருக்கக் காணலாம்.

"ஏல விலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் பிலிமத்தலாவ கிளையின் முகாமையாளரைத் தொடர்பு கொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 081- 2577151/ 081-2579600"

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு.ஆர்.எம்.எஸ்.எஸ். பண்டார,
முகாமையாளர்,

இலங்கை வங்கி,
பிலிமத்தலாவ.

10- 725

இலங்கை வங்கி
ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்

கடன் / நிரந்தர மேலதிகப்பற்று இல. -93729502

இல.453/ 1/1, கலகெதர, நிக்கவெரட்டியவசை் சேர்ந்த திரு. ராஜபக்ஷ பண்டாரலாகே தரிந்து ஷெஹான் ராஜபக்ஷ ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.09.25 ஆந் திகதியிட்ட 2508 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2026.10.01ஆம் திகதி வியாழக்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடப்படவேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும், நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எச்.துசித்த கருணாரத்ன அவர்கள் 2026.11.18ஆந் திகதி பி.ப. 12.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை

"சியம்பலாகஹமுலஹேன" என அழைக்கப்படும் காணியிலிருந்து உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.எம். எஸ்.கே. ஹேரத் தயாரித்த 2019, திசெம்பர் 28 ஆம் திகதிய வரைபட இல. 5900/2019இல் விபரிக்கப்பட்டுள்ள துண்டு 3A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மகுல் ஒத்தொட்ட கோரளை, வன்னி ஹத்பத்து, நிக்கவரெட்டிய பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 314 இஹலகொலகம கிராம அலுவலர் பிரிவில் உள்ள இஹலகொலகம (வரைபடத்தின்படி (FVP 1990) தனிகித்தவ) என்ற இடத்தில் அமைந்துள்ளது. வடக்கு: FVP 1990 இன் துண்டுகள் 434, 435 மற்றும் 436; கிழக்கு: FVP 1990 இன் துண்டுகள் 436 மற்றும் 37; தெற்கு: FVP 1990 இன் துண்டு 37 மற்றும் 1879/2019 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 2; மேற்கு : 1879/2019ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 2 மற்றும் FVP 1990 இன் துண்டு 434 என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒரு ரூட் மற்றும் பதினாறு பேர்ச்சஸ் (A0-R1-P16) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மண், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட 5900/2019ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 3A ஆனது கீழே விவரிக்கப்பட்டுள்ள காணியின் மறுநிலஅளவை ஆகும்.

